**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலன் – அரசு மறுவாழ்வு இல்லங்கள் – 10 அரசு மறுவாழ்வு இல்லங்களில் தங்கியுள்ள 1183 இல்லவாசிகளுக்கு மழை மற்றும் குளிர் காலத்தில் பயன்படுத்த போர்வைகள் வழங்குவது – ரூ.4,73,200/–க்கு நிதி ஒப்பளிப்பு வழங்குவது – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை (1 D) எண்.43** **நாள்: 23.12.2014**

**ஜய–மார்கழி 8, திருவள்ளுவர் ஆண்டு, 2045**

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (நிலை) எண்.33, மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை, நாள் 08.09.2011.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் ந.க.எண்.483/மஇநிர்.3/2014, நாள் 27.05.2014 மற்றும் 21.08.2014.

–––––

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், 10 அரசு மறுவாழ்வு இல்லங்களில் தங்கியுள்ள 1344 இல்லவாசிகளுக்கு மழை மற்றும் குளிர் காலங்களில் பயன்படுத்த ஏதுவாக, 'கோ–ஆப் டெக்ஸ்' நிறுவனத்தின் மூலம் ஒரு போர்வையின் விலை ரூ.180/– வீதம், 1344 போர்வைகள் வாங்கி வழங்குவதற்கு ரூ.2,41,920/– நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்பட்டது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதங்களில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள், 2011 ஆம் நிதியாண்டில், அரசு மறுவாழ்வு இல்லங்களில் வசிக்கும் 1344 இல்லவாசிகளுக்கு போர்வைகள் வாங்கி வழங்கப்பட்டது என்றும், தற்போது அவ்வில்லவாசிகளுக்கு போர்வைகள் வாங்கி வழங்கப்பட்டு 3 ஆண்டுகள் முடிவுறும் தருவாயில், அப்போர்வைகள் பெரும்பாலும் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதால், 2014–15 ஆம் நிதியாண்டில் போர்வைகள் வாங்கி வழங்குவது அவசியம் என்றும், 10 அரசு மறுவாழ்வு இல்லங்களில் தங்கியுள்ள குழந்தைகள் உட்பட 1183 இல்லவாசிகள் உள்ளனர் என்றும், அவ்வில்லவாசிகள் குளிரை தாங்கும் வகையில், கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்திடமிருந்து போர்வைகள் வாங்கி வழங்கிட, ஒரு போர்வையின் விலை ரூ.400/– மற்றும் ரூ.540/– என்ற வகையில் விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதாகவும், 2014–2015 ஆம் நிதியாண்டில், இல்லவாசிகளுக்கு போர்வைகள் வாங்கி வழங்கிட ரூ.6,38,820/– நிதி ஒப்பளிப்பு வழங்குமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

[த.பி.பா]

3. மேற்காணும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்று, 2014–15 ஆம் நிதியாண்டில், 10 அரசு மறுவாழ்வு இல்லங்களில் வசிக்கும் 1183 இல்லவாசிகளுக்கு, மழை மற்றும் குளிர் காலங்களில் பயன்படுத்த ஏதுவாக, 'கோ–ஆப் டெக்ஸ்' நிறுவனத்தின் மூலம், ஒரு போர்வையின் விலை ரூ.400/– வீதம், 1183 போர்வைகள் வாங்கி வழங்குவதற்கு ரூ.4,73,200/– (ரூபாய் நான்கு லட்சத்து எழுபத்து மூன்றாயிரத்து இருநூறு மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கியும், இச்செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதியளித்தும் அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி மூன்றில் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

**2235–சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02–சமூக நலன் – 104–முதியோர், இயலாமையுற்றோர் மற்றும் ஆதரவற்றோர் நலன் – I–திட்டத்தில் சேராதது – AI– தொழுநோய் பிச்சைக்காரர்களுக்கான மறுவாழ்வு இல்லம் – 46–உடைகள், கூடாரச் செலவுகள், பண்டகசாலைப் பொருள்கள். (து.தொ.கு.2235–02–104–AI–4609).**

5. மேலே பத்தி மூன்றில் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்திற்கு தேவையான நிதியொதுக்கம் 2014–2015 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு/இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். 2014–15 திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில், மேற்படி நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதை எதிர்நோக்கி, இச்செலவினத்தை மேற்கொள்ள, மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள் அனுமதிக்கப்படுகிறார். மேலும், இச்செலவினத்தை தவறாமல் 2014–2015 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு/இறுதி திருத்த நிதியொதுக்கத்திற்கான கருத்துருவை நிதித் (சந/வ.செ.பொது–II) துறைக்கு சேர்த்து அனுப்பும்படி மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

6. இவ்வரசாணை நிதித் துறையின் அலுவல் சார்பற்ற எண்.69108/நிதி/சந/2014, நாள் 20.12.2014 மற்றும் கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண்.1857 (ஆயிரத்து எண்ணூற்று ஐம்பத்தேழு)–ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பொ. சிவசங்கரன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்**

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.
அனைத்து அரசு மறுவாழ்வு இல்லங்கள்.
(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டம்) அவர்களின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.

**நகல்**

நிதித் (சந)/(வ.செ.பொது.I)/(வ.செ.பொது.II) துறை, சென்னை–9.
இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை–9
உதிரி நகல் / இருப்பு கோப்பு.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.